RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt20216

# தமிழ்ச் சிறுகதைகளில் அறச் சிந்தனைகள்

## பா. இரவிக்குமார் [அ, *]

[அ] சுப்பிரமணிய பாரதியார், தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி-605014 தமிழ்நாடு இந்தியா

# Moral Thoughts in Tamil Short Stories

## B. Ravikumar [a, *]

[a] Subramania Bharathi School of Tamil Language and Literature, Pondicherry University, Puducherry-605 014, Tamil Nadu, India

* Corresponding Author: paa.ravikumar1@gmail.com

Received : 09-01-2020
Accepted : 15-03-2020

Check for updates

**ABSTRACT**

Moral literature has a special place in the history of Tamil literature. We know that the historians of literature who divide the history of literature chronologically classify the literature after the Sangam literature as 'Moral literature' and the three centuries after the second century A.D. as 'Moral Period'. Eighteen books such as Tirukkural, Nālaḍiyar, Pozhamozhi Nānooru, Āsārākkovai etc., are classified as Pathinenkeezhkanakku books. It is believed that modern literati do not talk much about 'Dharma'. It is common knowledge that modern literature is against 'Dharma', but this statement is untrue. On this basis, this article has been written with the aim of revealing the moral thoughts found in Tamil short stories.

**Keywords:** Tirukkural, Moral Period, Short Stories, Pathinenkeezhkanakku

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் அற இலக்கியத்திற்கென்று தனித்த இடம் உண்டு. இலக்கிய வரலாற்றைக் காலவரிசைப்படி பகுக்கும் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் சங்க இலக்கியத்தை அடுத்து இடம்பெறும் இலக்கியங்களை 'அற இலக்கியங்கள்' என்றும், கி.பி.இரண்டாம் நூற்றாண்டிற்கு அடுத்து இடம்பெறும் மூன்று நூண்டுகளையும் 'அறநெறிக் காலம்' என்று பாகுபடுத்துவதையும் அறிவோம். திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, ஆசாரக்கோவை முதலான பதினெட்டு நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

சங்க காலத்தை அடுத்து வந்த நீதி இலக்கியங்களை அற இலக்கியங்கள் என்று பாகுபடுத்தும் போக்கை பெரும்பாலான தமிழ் இலக்கிய வரலாறு நூல்களில் காணலாம்.அற இலக்கியங்கள் உருவாக, அன்றைய சமூகச் சூழலும் சமூகப் பின்னணியும் இடம் தந்தன.ஆனால், தமிழ் இலக்கிய வரலாறு முழுவதும் பல்வேறு காலகட்டங்களில், அறச் சிந்தனைகள் வலியுறுத்தப்பட்டு வந்தன. சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சித்தர் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் அனைத்திலும் சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கு மிகுதியாக இருந்த

**காலகட்டத்தில், அறச்சிந்தனைகள் மையமாக இருந்தன. பிற காலகட்டங்களில், இலக்கியங்களின் தன்மைக்கேற்ப இருந்தன எனப் புரிந்துகொள்வதில் தவறேதுமில்லை. சுருங்கக்கூறின், அறச்சிந்தனைகள் இல்லாமல் தமிழ் இலக்கியம் இருந்ததில்லை. தற்காலத் திறனாய்வாளர்களுள் குறிப்பிடத்தக்க மார்க்சிய அறிஞரான ஞானி, தன் கட்டுரைகளில் 'தமிழறம்' எனக் குறிப்பிட்டுச் செல்வதை நினைவு கூர்வது அவசியம்.**

**நவீன இலக்கியவாதிகள் 'அறம்' குறித்து மிகுதியாகப் பேசுவதில்லை என நம்பப்படுகிறது. நவீன இலக்கியம் என்பது 'அறத்திற்கு' எதிரானது என்பது பொதுப்புத்தியில் படிந்துபோன ஒன்று.ஆனால் இக்கூற்று உண்மைக்குப் புறம்பானது. அறம் குறித்த மதிப்பீடுகள் (Values) மாறியிருக்கலாம்.எந்நாளும் மாறாத அறச்சிந்தனைகள் என்று எதுவும் இருக்க இயலாது. இந்த அடிப்படையில், தமிழ்ச் சிறுகதைகளில் காணப்படும் அறச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.**

## அறநெறி அணுகுமுறை

**திறனாய்வு அணுகுமுறைகளுள் சமுதாயவியல், வரலாற்றியல், உளவியல், மொழியியல், முதலிய அணுகுமுறைகளை வலியுறுத்தும் திறனாய்வாளர்கள் 'அறநெறி அணுகுமுறை'யை வலியுறுத்துவதில்லை. ஆனால், 'திறனாய்வுக் கலை' என்னும் நூலை எழுதியுள்ள தி.சு.நடராசன், தன் நூலில் 'அறநெறி அணுகுமுறையை' வலியுறுத்தியுள்ளார்** (Natarajan, 2018). **இலக்கியத்தில் அறநெறிக் கோட்பாடு மிகவும் பழமையானது என்பதையும், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலிய நூல்களில் அறிநெறி வலியுறுத்தப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

**"அமெரிக்காவில் இந்நூற்றாண்டில் 20, 30களில் இதற்குச் செல்வாக்கு இருந்தது. நவீன மனித நேயவாதிகள் (New Humanities) என்ற கொள்கையினர், இலக்கியத்தில் அறவியல் நெறியின் அவசியத்தை வலியுறுத்துகின்றனர். இவர்களில் முக்கியமானவர்கள், இர்விங் பாபிட் (Irving Babbit) மற்றும் பால்மோர் (Paul Elmore) நார்மன் ஃபோஸ்டர் (Norman Foester)"**

**நெறிமுறை, கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகிய கருத்துக்களை வலியுறுத்தும் இவர்களின் பார்வை, இயல்பு நவிற்சி வாதம், புனைவியல் ஆகியவற்றை மறுக்கின்றது என்பதையும் தி.சு.நடராசன் சுட்டிக்காட்டியுள்ளார்** (Natarajan, 2018).

**தமிழ்ச் சூழலில் திறனாய்வு முறையாக வளர்ச்சியுறாததால், அறநெறி அணுகுமுறையை வலியுறுத்தும் திறனாய்வாளர்கள் தோன்றவில்லை எனலாம்.எனினும், தமிழ் வாழ்க்கையிலும் இலக்கியத்திலும் 'அறநெறி' காலம் காலமாக வளர்ந்துள்ளது. 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்பதே காப்பியங்கள் உணர்த்துகின்ற அறநெறி. 'தர்மத்தின் வாழ்வு தனைச் சூது கவ்வும் / தர்மம் மறுபடியும் வெல்லும்' என்பதே பாஞ்சாலி சபதத்தில் பாரதி வலியுறுத்திய அறநெறி.**

**இவ்வாறு அறநெறிச் சிந்தனைகள் தமிழ் இலக்கியம் அனைத்திலும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன. நவீன இலக்கியம், மரபு இலக்கியத்திலிருந்து பெரிதும் வேறுபடுவன என்பதால், நவீன இலக்கியத்திலுள்ள அறச் சிந்தனைகளைப் பெரும்பாலும் யாரும் ஆய்விற்குட்படுத்தவில்லை.**

இனி, தமிழ்ச் சிறுகதைகளிலுள்ள அறச் சிந்தனைகள் எவ்வாறு வெளிப்பட்டுள்ளன என்பதை ஆராயலாம்.

## சார்வாகனின் 'முடிவற்ற பாதை'

தமிழின் ஆகச்சிறந்த புனைகதை யாசிரியர்களுள் ஒருவர் சார்வாகன். அடிப்படையில் ஒரு மருத்துவர். தொழுநோயை ஒழிக்கவேண்டும் என்பதற்காக இவர் மேற்கொண்ட செயல்கள் தனிவரலாறு. 1964 முதல் இவர் எழுதி வந்துள்ளதாக அறிய முடிகிறது. இவருடைய கதைகளையும், குறுநாவல்களையும் நற்றிணை பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

இவர் எழுதியுள்ள 'முடிவற்ற பாதை' என்னும் சிறுகதையைத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் ஒரு மைல் கல் என்றே குறிப்பிடலாம்.

'முடிவற்ற பாதை' கதையில் இடம்பெறும் 'தபால்காரக் கதிர்வேலு' என்னும் அரிய கதைமாந்தர் அறம் இன்னும் இந்தத் தமிழ் நிலத்தில் தழைக்கிறது என்பதற்குச் சான்று.இக்கதையில் இடம்பெற்றுள்ள அறச்சிந்தனையை வெளிப்படுத்த, கதைச் சுருக்கத்தை அளிப்பது அவசியம். கதை பின்வருமாறு தொடங்குகிறது:

"தபால்காரக் கதிர்வேலு ரொம்பச் சாதாரணமான மனுஷன்தான். தன் வேலையைத் தனக்குத் தெரிந்த முறையில் நாணயமாகவும் ஒழுங்காகவும் செய்து நல்ல பேர் வாங்கி, பெரியதொரு குடும்பத்தைப் பெற்றெடுத்து வளர்த்துக் கொண்டு, தரித்திரத்தின் ஓரத்திலே நின்று காத்திருந்து நல்ல நாள் என்றைக்காவது வராதா என்ற நம்பிக்கையில் ஒட்டிக்கொண்டு தவம் செய்யும் லட்சோப லட்சம் ஜனங்களில் அவரும் ஒருவர்" (ப.31)

தபால்காரக் கதிர்வேலை இவ்வாறுதான் அறிமுகம் செய்கிறார் சார்வாகன் (Sarvagan, 2013). கதையின் அடுத்த பகுதியில், கதிர்வேலின் வறுமையும் துயரங்களும் பேசப்பட்டுள்ளன. டி.பி.நோய்க்கு ஆளான மனைவி.நான்காவது பிள்ளைப் பேற்றுக்காக வீட்டிற்கு வந்திருக்கும் பெரிய பெண். கள்ளச் சாராயக் கேஸில் மாட்டிக்கொண்டு ஊரைவிட்டு ஓடிய மகன்… காலரா நோயில் உயிரைப் பறிகொடுத்த மூன்றாவது மகன்… எதிர்பாராத துயரங்களாலும், நிரந்தர வறுமையாலும் துயருரும் குடும்பம்.

இச்சூழலில், தன் அலுவலகத்திற்கு வந்துள்ள மணியார்டரை, எல்லம்மா எனும் கிழவியிடம் சேர்க்க, ஐநூறு ரூபாயை எடுத்துக்கொண்டு செல்கிறார் கதிர்வேலு.வெயில் நேரத்தில், நீண்ட தூரம் பயணப்பட்டு, எல்லம்மாவின் குடிசையை அடைகிறார்.பலமுறை குரல் கொடுத்தும் எல்லம்மா வருவதாக இல்லை.அவ்வழியே வரும் பாலு நாயக்கர் எனப்படும் பலராமநாயக்கர் மூலமாகக் கிழவி இறந்துவிட்டாள் என்னும் செய்தியை அறிந்துகொள்கிறார்.

எல்லம்மாவின் மகன் குருசாமி வடநாட்டிலிருந்து அனுப்பிய ஐநூறு ரூபாய் பணத்தை 'எடுத்து'க் கொள்ளலாம் என்று மறைமுகமாக பாலு நாயக்கர் கதிர்வேலுவிடம் யோசனை கூற, அதை நாசுக்காக மறுத்துவிடுகிறார் கதிர்வேலு. பாலு நாயக்கர் அவ்விடத்தைவிட்டுச் சென்றுவிட, மணியார்டரைப் பிரித்து அதில் எழுதப்பட்டுள்ள வாசகங்களைப் படிக்கிறார் கதிர்வேலு.

உண்மையில், அந்தப் பெருந்தொகையை அனுப்பியது எல்லம்மாவின் மகன் குருசாமி இல்லை.குருசாமி ஒரு விபத்தில் இறந்துவிட, குருசாமி சேர்த்துவைத்த பணத்தை அனுப்பியது சரவணன் எனும் அவனுடைய நண்பன்.

கதிர்வேலு ஒரு கைநாட்டைக் கிழவி இடுவதுபோல் இட்டிருந்தால், இந்தப் பண அஞ்சல் அவருக்கே சேர்ந்திருக்கும்.கிழவி எல்லம்மாவும் உயிருடன் இல்லை.பணம் அனுப்பிய அவளுடைய மகன் குருசாமியும் உயிருடன் இல்லை.இந்த ஐநூறு ரூபாய் பணத்தைக் கதிர்வேலு எடுத்துக்கொண்டால், அதை எவரும் வினவப்போவதும் இல்லை.

ஒரு கணம் அதை எடுத்துக்கொள்ளலாமா என்று கதிர்வேலுவும் சிந்தனை செய்கிறார்.அந்தப் பணத்தைக் கொண்டு, கதிர்வேலு தன் மனைவிக்கு மருந்து வாங்கலாம்.கடன்களை அடைக்கலாம்.நல்ல ஆடைகளை வாங்கிக் கொள்ளலாம். ஆனால், கதையின் இறுதியில் சார்வாகன் எழுதுகிறார் (Sarvagan, 2013).

“நடுங்கும் கையால் சட்டைப் பையிலிருந்து பேனாவை எடுத்தார். ‘விலாசதாரர் காலமாகிவிட்டார்’ என்று எழுதும்போது அவர் கைகளும் தொடையும் வேர்த்து அதிர்ந்தன.மணியார்டர் ஃபாரத்தை மீண்டும் பையிலும், பேனாவைச் சட்டைப் பையிலும் வைத்தார்.” (ப.39)

சூழ்நிலை இடம் கொடுத்தபோதும், வறுமை நிலையிலும், பணத்தை எடுக்காமல், அதை அரசாங்கத்திற்குச் சேர்க்கும் ‘தபால்காரக் கதிர்வேலு’ என்னும் பாத்திரம் தமிழ்ச் சிறுகதையுலகில் அரிதான ஒன்று.

அறச் சிந்தனைகள் நிலவுடைமைச் சமூகத்திற்குமட்டும் உரித்தானவை என்னும் கருத்து முழு உண்மையன்று; அவை முதலாளித்துவச் சமூகத்திற்கும் உரியவை; சோசலிஸ சமூகத்திற்கும் தேவைப்படுபவை. தி.சு.நடராசன் மிக முக்கியமான ஒரு கருத்தைத் தன் கட்டுரையில் எழுதியுள்ளார்.

“அறநெறித் திறனாய்வில் முடிவாகக் கவனிக்கத்தக்கது. அறநெறிகள் என்பவை, காலம், இடம் எனும் தளத்திற்குட்பட்ட சார்புநிலைக் கொள்கைகளே என்பது.அதாவது, அவை என்றும் ஒரே மாதிரியாக இருப்பன அல்ல; மாறக் கூடியவை; வளரக் கூடியவை.மேலும், இலக்கியமாகியிருக்கின்ற தன்மையினையும் பொறுத்தவை, இவை.” (ப.50)

இதன் அடிப்படையில் பிரபஞ்சன் எழுதிய ‘சிக்கன் பிரியாணியும் சீதேவி படமும்’ என்னும் கதையும் குறிப்பிடத்தக்கது.

அறம், தர்மம், ஒழுக்கம், நியாயம் முதலியனவற்றை வெறும் சொல்லாக மட்டுமே அறிந்து அதற்கு எதிராகத் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட ‘நாகராஜன்’ என்பவனைப் பற்றிய கதை இது.

பணத்திற்காக மனிதர்களை ஏமாற்றும் ஓர் அரசியல் ஏஜண்டைப் பற்றிய கதை இது.வேலை நிமித்தமாகத் தன்னை நாடி வரும் மனிதர்களை அன்றாடம் ஏமாற்றுவதே நாகராஜனின் தொழில். தனக்கு அமைச்சர்களையும், அதிகாரிகளையும் நன்றாகத் தெரியும் என்று பொய் சொல்லி, கிடைக்கும் பணத்தைக் கொள்ளையடித்து, அப்பாவி மனிதர்களை ஏமாற்றும் நாகராஜனை மையப் பாத்திரமாக்கியுள்ளார் பிரபஞ்சன் (Prabanjan, 2017).

ரயிலில், ஏதோ ஒரு கிராமத்திலிருந்து அழுக்குமூட்டையுடன் வந்திறங்கும் 'மண்ணாங்கட்டி' என்பவனுக்கு உதவ முன் வருவதுபோல் பாவனை செய்கிறான் நாகராஜன்.மண்ணாங்கட்டியிடம் நிறைய பணம் இருப்பது நாகராஜனுக்குப் புரிகிறது.மண்ணாங்கட்டியின் தங்கைக்கு அரசு வேலை வாங்கித் தருவதாகவும், அது குறித்து அமைச்சரிடம் பேசுவதாகவும் வாக்களிக்கிறான் நாகராஜன்.

மண்ணாங்கட்டியின் அறியாமையையும், நாகராஜனின் சூழ்ச்சியையும் மிக இயல்பான நடையில் விவரித்துள்ளார் பிரபஞ்சன்.

விஸ்கி, சிக்கன் பிரியாணி, கார் சவாரி, ஸ்வாகத் ஓட்டல் மல்லிகைப்பூ என்று மண்ணாங்கட்டிக்கு மிகப் பெரிய செலவினை வைக்கத் திட்டமிடும் நாகராஜன் அவற்றைச் செயல்படுத்தவும் செய்கிறான். கோட்டைக்கு வரும் அமைச்சரிடம் மண்ணாங்கட்டியை அறிமுகப்படுத்தும் நாகராஜன், அன்று மதியம் ஒரு பிரம்மாண்டமான ஓட்டலில், மூன்று பேருக்கு விருந்தளிக்கிறான்.அனைத்தும் மண்ணாங்கட்டியின் செலவில்.

ஓர் அப்பாவி கிராமத்து மனிதனை ஏமாற்றுகிறோமே என்ற எண்ணம் கிஞ்சித்தும் நாகராஜனிடம் இல்லை.

இப்படிப்பட்ட மனிதனிடத்தில்கூட ஈரம் இருக்கிறது என்பதைக் கதையின் இறுதியில் புலப்படுத்தியுள்ளார் பிரபஞ்சன்.

"அண்ணே! உங்களைத்தான் தெய்வமா நம்புறேன். பெத்தவங்களையும் விழுங்கிவிட்டு, புருஷனையும் விட்டுட்டு அந்தப் பொட்டப் புள்ளைக்கு நீங்கதான் மனம் இறங்கணும்… அதுக்கு ஒரு வேலை வைக்கணும்…" என்றவன், நாகராஜனே திடுக்கிட, அவன் காலில் விழுந்தான்" (ப.428)

மண்ணாங்கட்டியின் கண்ணீரின் ஈரத்தில் பணம் நனைவதுடன், நாகராஜனின் மனமும் நனைகிறது.

"எப்படியாவது மண்ணாங்கட்டியின் தங்கைக்கு வேலை வாங்கிக் கொடுத்துவிடவேண்டும்" என்று முதல்முறையாக நினைத்தான் நாகராஜன்." (ப.428) என்னும் வரியுடன் கதை நிறைவடைகிறது.

இன்றைய முதலாளித்துவச் சமூகத்தில், மனிதர்களை ஏமாற்றி, பணம் பறிப்பதையே தொழிலாகக் கொண்ட மனிதனிடத்தில்கூட 'அறம்' மிச்சமிருப்பதைப் புலப்படுத்தியுள்ளது பிரபஞ்சனின் சிறுகதை.

## ஜெயமோகனின் 'யானை டாக்டர்'

அறத்தை வலியுறுத்தும் குறிப்பிடத்தக்க நவீனச் சிறுகதைகளுள் ஒன்று ஜெயமோகனின் 'யானை டாக்டர்' என்னும் கதை.'அறம்' என்னும் ஜெயமோகனின் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதை இது.'யானை டாக்டர்' என்னும் கதை, டாக்டர் வி.கிருஷ்ணமூர்த்தி என்பவரை மையப்படுத்தி எழுதப்பட்ட கதை.யானைகளுக்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்ட டாக்டர் வி.கிருஷ்ணமூர்த்தி, தமிழக வனத்துறையில் பணியாற்றிய விலங்கியல் மருத்துவர்.

“உலகிலேயே அதிக யானைகளுக்குச் சவப்பரிசோதனை செய்தவர் அவரே. அதிகமான யானைகளுக்குப் பிரசவம் பார்த்தவரும் அவரே” (ப.389) என்று அவரைப் பற்றிய குறிப்புகளை அறம் தொகுப்பின் பின்னிணைப்பில் தந்துள்ளார் ஜெயமோகன் (Jeyamohan, 2014).

‘யானை டாக்டர்’ அளவில் பெரிய கதை. காடுகளில் சுற்றுலா செல்லும் மனிதர்கள், குடித்துவிட்டு பாட்டிலை உடைத்து ஆங்காங்கே போட்டுவிடுவதால், அதை மதிக்கும் சில யானைகளுக்குக் சீழ் பிடித்துவிடுகிறது. சீழ் பிடிப்பதன் விளைவு, புழுக்கள் உருவாகின்றன. இப்படி நோய்வாய்ப்படும் யானைகளுக்கு அருவருப்பில்லாமல் சிகிச்சை செய்யும் உன்னத மனிதரான கிருஷ்ணமூர்த்தியின் கதையையும், வனவிலங்குகள் மனிதர்களால் பாதிக்கப்படுவதையும் அற்புதமான முறையில் எழுதியுள்ளார் ஜெயமோகன்.

“யானையின் காலில் பாதி பீர்புட்டி ஒன்று முழுமையாக உள்ளே ஏறியிருந்தது. அதைச் சுற்றி சீழ் கட்டி, சீழில் புழு வைத்து சிறுதேன்கூடு போலப் பொருக்கோடியிருந்தது.கத்தியால் டாக்டர் கே.அந்தப் பொருக்கை வெட்டியதும் பெரிய தயிர்க்கலயம் உடைந்தது போலச் சீழ் வெளியே கொட்டியது.தேன்கூடு போலச் சிறிய துளையறைகளுக்குள் வெண்புழுக்கள் நெளிந்தன.டாக்டர் அந்தச் சீழ்பட்ட சதையை முழுக்கச் சிறிய கோடாலி போன்ற கருவியால் வெட்டி எடுத்தார்.புழுக்கள் என் கைகளில் ஏறின. அவற்றைச் சுண்டி ஆழப்பதிந்திருந்த சதையைக் கத்தியால் அறுத்து எடுத்து வீசிக் காயத்தை நன்றாக விரித்துப் புட்டியை உருவி எடுத்தார்.ஆச்சரியமாக இருந்தது.கிட்டத்தட்ட என் கையளவு பெரிய புட்டி.” (ப.105)

வாழ்க்கையில் எவ்வித எதிர்பார்ப்புமின்றி, இவ்வாறு யானைகளுக்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட மனிதர்கள் இருப்பதால்தான் ‘அறம்’ நிலைக்கிறது என்பதைச் சொல்லாமல் சொல்லும் கதைதான் ஜெயமோகனின் ‘யானை டாக்டர்’.

“பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்

மண்புக்கு மாய்வது மண்”

என்னும் வள்ளுவனின் குறள் எழுதப்பட்டது இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு.ஆனால், இருபத்தோராம் நூற்றாண்டிலும் அறத்தின் குரல் ஜெயமோகனின் வழியே ஒலிக்கிறது என்பதுதான், ‘தமிழறம்’ தொடர்கிறது என்பதற்கான அடையாளம்.

## முடிவுரை

எதார்த்த வகை எழுத்து மரபான சிந்தனைகளை மறுதளிக்கிறது என்பது உண்மைதான் என்றபோதும் மாறிவரும் காலத்திற்கேற்ப அறச்சிந்தனைகள் தமிழ் இலக்கியம் முழுவதும் தொடர்கின்றன என்பதையே சார்வாகன், பிரபஞ்சன், ஜெயமோகன் ஆகியோரின் கதைகள் புலப்படுத்துகின்றன. அற இலக்கியங்கள் அறக் கருததுக்களைப் பிரச்சாரம் செய்பவை. மாறாக நவீனச் சிறுகதைகள் அறச் சிந்தனைகளை வாசக அனுபவமாக மாற்றுபவை. வெளிப்படையாக இல்லாவிட்டாலும், மறைமுகமாக வேணும் அறக்கருத்துக்கள் நவீன இலக்கியங்களில் வெளிப்படும். அவற்றை அடையாளம் காண்பது வாசகர்களின் பொறுப்பாகும்.

## References

Jeyamohan, (2014) Aram Unmai Manitharin Kathi, Vamsi Pathippagam, Thiruvannamalai, India

Natarajan, T.S. (2018) Thiranaivu Kolkaikalum Anugu Muraikalum, New Century Book House, Chennai, India

Prabanjan, (2017) Prabanjan Kathikal, Discovery Book Palace, Chennai, India

Sarvagan, (2013) Sarvagan Kathaikal, Nattrinai Pathippagam, Chennai, India

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License